**கங்க இஹல கோரலே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆம் திகதியும், முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கங்க இஹல கோரலே பிரதேச சபையின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

1.3.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பிரதேச சபையை வழுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த 2 கருத்திட்டங்களுக்காகமீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 991,680 ஆன மூலதன செலவினம் மீண்டுவரும் செலவாக கணக்கிடப்பட்டிருந்தது.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) **பெற வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 க்கு பெற வேண்டிய 8 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,127,796 ஆனதுடன், அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய கணக்கு மீதிகளின்கூட்டுத்தொகை ரூபா 1,279,360 ஆனது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 க்கு ரூபா 15,365,939 ஆன செலுத்த வேண்டிய2 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,752,838 வேலைக் கடன்கொடுனர் ஆனதுடன், அவற்றில் ஓர் ஆண்டை விஞ்சிய கணக்கு மீதிகளின்கூட்டுத்தொகை ரூபா 8,698,689 ஆனது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

2 கணக்கு விடயங்கள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததனால்,கூட்டுத்தொகை ரூபா 79,293,913 ஆன கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றாய்வு செய்வதற்கு இயலாமலிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன்இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள் | | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 218 | சபைக்கு சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடமும் ஒரு முறை கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை | |
| (i) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய இலக்க 41/90 | சபைக்கு உரித்தான 07 வண்டிகளின் எரிபொருட் பயன்பாடு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2001 ஆகஸ்ட் 7 ஆம் திகதிய 15/2001 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | ஊழியர்களின் வரவு மற்றும் வெளியேருதலை குறிப்பதற்காக நேரக் குறிப்பு இயந்திரம் பாவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் விஞ்சிய வருமானம் ரூபா 13,977,226 ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் விஞ்சிய வருமானம் ரூபா 18,127,662 ஆனமையால்,நிதி விளைவுகளில் ரூபா 4,150,436 ஆன வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மீளாய்வாண்டின் ஜனவரி 01 திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 1,575,086 ஆனதுடன் , அவற்றில் ஆண்டின் போது ரூபா 682,743 அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் பற்றுச்சீட்டிடல் வருமானம் ரூபா 971,479 ஆனதுடன்,அவற்றில் ரூபா 682,708 அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நிலுவை மற்றும் பற்றுச்சீட்டிடலின் அறவிடப்பட்ட சதவீதம் முறையே 43 சதவீதம் மற்றும் 70 சதவீதம் ஆனதுடன், திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை மீதி ரூபா 1,181,114 ஆனது. அதன் பிரகாரம், வருமானம் அறவிடல் பலவீனமாக நிலவியது. அம் மீதிகளின் 2017 ஏப்ரல் 30 திகதி அன்று ரூபா 889,741 மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**(ஆ)** நிலுவை வீத வரி மீதியினுள் பல வருடங்களாக நிலவும் 10 அரச நிறுவனங்களின் ரூபா 278,299 ஆன நிலுவை வீத வரி மீதிகள் அறவிடலுக்கு நடடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியின் 2017 ஏப்ரல் 30 திகதி அன்று ரூபா 161,915 மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**(இ)** **5** வருடத்திற்கு ஒரு முரையாவது புது வீத வரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 9 வருடம் விஞ்சிருந்தும், 2007 ஆண்டின் வீத வரி மதிப்பீட்டின் படி மீளாய்வாண்டின்டிலும் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஈ)** 2011 செப்தெம்பர் 27 ஆம் திகதி மகா சபை தீர்மானப் பிரகாரம், புது வீத வரி 5 பிரதேசங்களின் கீழ் 3107 அலகுகள் வீத வரி அறவிடுவதற்கு இனங்கண்டிருந்த போதும், அது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 குத்தகை வாடகை**

(அ) 1998 ஆண்டு முதல் 2006 ஆண்டு வரையான காலத்தினுள் குருந்துவத்த நகரின் அகற்றப்பட்ட 13 கடையறைகாரர்களின் நிலுவை கடை வாடகை மீதி ரூபா 138,626 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருந்துவத்த வியாபார கட்டிடத் தொகுதியில் 6 கடையறைகள் ரூபா 5,000 முதல் ரூபா 25,000 இடையிலான மாதாந்த வாடகை பணத்திற்கு ஏனைய தரப்பினருக்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(இ) ஒரேமுறையில் அறவிடவேண்டிய பணத்தை பூர்னமாக அறவிடாது எத்கால வியாபார கட்டிடத் தொகுதியின் கடையறைகள் ஒப்படைக்கப்பட்ட 3 வியாபாரிகலிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் ரூபா 407,000 ஆன பணம் 6 வருடங்களுக்கு கிட்டிய காலமுதல் நிலுவையாக நிலவியது. அம் மீதியில் 2017 ஏப்ரல் 30 திகதி வரை ரூபா 383,000 தொகை மேலும் அறவிடப்பட வேண்டி இருந்தது.

**(ஈ)** 2016 நவம்பர் 08 திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனயின் போது எத்கால வியாபார கட்டிடத் தொகுதியின் 14 கடையறைகள் ஒர் ஆண்டுக்கும் அதிக காலத்திலிருந்து மூடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டன.

**(உ)** குருந்துவத்த வியாபார கட்டிடத் தொகுதியின் வாடகை காரர்கள் 4 கடையறைகளை வேறு தரப்பினருக்கு ரூபா 1,520,000 ஆன தொகைக்கு விற்கப்பட்டுள்ளது என 2016 நவம்பர் 18 திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனயின் போது அவதானிக்கப்பட்டது. குருந்துவத்த நகரில் மேலும் 13 கடையறைகள் எவ்வித ஒப்பந்தமும்பெறுகை நடைமுறையுமின்றி ரூபா 1,100 ஆன மாதாந்த வாடகை பணத்திற்கு சமுர்த்தியாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 3 சமுர்த்தியாளர்களது கடையறைகள் இப்போது 1 வருடம் முதல் 8 வருட இடையிலான காலபகுதியில் சபையின் அனுமதியின்றி வெளித்தரப்பினருக்கு ரூபா 2,000 முதல் ரூபா 2,600 இடையிலான வாடகைப் பணத்திற்கு உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**2.2.3 ஏனைய வருமானம்**

(அ) ஏக்கர் வரி

2016 திசெம்பர் 31 திகதியில் ரூபா 66,283 நிலுவையான ஏக்கர் வரி மீதி நிலவியதுடன்,அம் மீதியினுள் 5 வருடத்திற்கு மேலான ரூபா 24,304 ஆன பழைய மீதியொன்று உள்ளடங்கப்பட்டிருந்தது.

(ஆ) நீர் கட்டனம்

பின்வரும் அவதானிக்கப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 1999 ஆண்டு அளவில் அமுல்படுத்தப்பட்ட தற்போது செயலற்ற 7 நீர் உத்தேசத்திட்டங்களுக்குறிய 104 நீர் பாவனையாளர்களின் ரூபா 72,559 நிலுவையான நீர் கட்டனம் 2003 ஆண்டு முதல் 13 வருட காலமாக அறவிடுவதற்கு அல்லது அது தொடர்பாக உறிய நடவடிக்கை எடுக்குவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்ககவில்லை.

(ii) நீர் உத்தேசத்திட்டங்களை பழுதுபார்பதற்கு வருடாந்த பாதீட்டில் ரூபா 200,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், செயலற்ற நீர் உத்தேசத்திட்டங்களை பழைய நிலைமைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தற்போது அமுலிலுள்ள 2 நீர் உத்தேசத்திட்டங்களுடாக 62 நபர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நீர் க்லோரின் இடப்பட்டு அல்லது வடித்தல்/சுத்திகரித்தல் செய்யப்படாது சுகாதார பாதுகாப்பற்றதாக விநியோகிக்கப் பட்டுக்கொண்டிருந்தது.

**(இ) விளம்பர பலகைக் கட்டணம்**

(i) 36 விளம்பர பலகைகளால் ரூபா 68,950 வருமானம் 2016 திசெம்பர் 31 வரையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அம் மீதியின் 2017 மே 30 அன்று ரூபா 30,100 ஆன தொகை மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

(ii) 2015 ஆண்டிற்கு முன்னிருந்து முன்கொன்டுவரப்பட்ட ரூபா 48,600 ஆன மீதி எடிசலாட் தனியார் நிறுவனமிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) முச்சக்கர வண்டி கட்டணம் அறவிடல்**

பதிவு செய்யப்பட்ட 45 முச்சக்கர வண்டிகளால் மீளாய்வாண்டிற்காக ரூபா 148,500 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், முச்சக்கர வண்டி கட்டணம் அறவிடல் தொடர்பாக உப யாப்பு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. அந் நிலுவை மீதியின் 2017 ஏப்ரல் 30 திகதி அன்று ரூபா 127,800 மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 135,583 மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 2,175,453 பெற வேண்டியதாக இருந்தது. நிலுவை நீதிமன்ற தண்டப்பண மீதியின் 2017 யூன் 05 க்கு ரூபா 82,500 மேலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**(அ)** சபை நிதியத்தின் கீழ் அபிவிருத்தி உத்தேசத்திட்டங்கள் அமுல்படுத்தல்

(i) சபை நிதியத்தினால் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 13 அபிவிருத்தி உத்தேசத்திட்டங்கள் உள்ளூராட்சி ஆனையாளரிக்கு ஆண்டின் இறுதி காலாண்டில் சமர்ப்பித்து 11 கருத்திட்டங்கள் அனுமதித்துக்கொண்டிருந்ததுடன், அவற்றில் 3 கருத்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேச சபை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டின் கருத்திடட்ங்கள் இனங்காணப்படாமல் மொத்த பெறுமதியின் மீது ஏற்பாடு செய்துகொண்டிருந்த ரூபா 10,200,000 ஆன மூலதன செலவு ஒதுக்கீட்டினை உபயோகித்துக்கொண்டு மீளாய்வாண்டினுள் 12 கருத்திட்டங்கள் மாத்திரம் செய்யப்பட்டு ரூபா 4,938,731 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஒதுக்கீடு நோக்கத்திற்குறிய வேலைகளுக்காக செலவு செய்யாமை

மீளாய்வாண்டில் பொதுமக்கள் சுகாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொதுமக்கள் சுகாதார விருத்தி மற்றும் பாதுகாப்புக்கான வேலைகளுக்காக 6 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்படடிருந்த ரூபா 170,000 ஆன ஒதுக்கீடு நோக்கத்திற்குறிய வேலைகளை செய்வதற்கு உபயோகித்துக்கொள்ளாமல் மொத்த ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** 2015 ஒக்டோபர் 28 திகதி ஓய்வுபெற்றிருந்த ஊழியர் ஒருவனிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 57,700 ஆன கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) துணைப் பிரிப்பு காணிகளில் பொது நடவடிக்கைகளுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 169.64 பர்சஸ் ஆன மேலும் 4 காணிகள் 2016 நவம்பர் 11 திகதி வரையும்,அபிவிருத்தி செய்யப்பட்டு பொதுநடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாதுடன், மரியவத்த எஸ்டேட் ஹில்டொப் காட்ன் எனும் துணைப் பிரிப்பு காணியின் பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த 37பர்சஸ் காணிக்காக உரித்துரிமை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக 2014-2016 வரையான காலபகுதிக்குள் கிடைத்திருந்த 381 கட்டிடங்களுக்கான விண்ணப்பங்களில் 235 விண்ணப்பங்களுக்காக அனுமதி பெற்றுக்கொடுத்திருந்த போதிலும்,அவற்றில் 25 க்கு மாத்திரம் தகைமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

ரூபா614,550 பெறுமதியான 3 வகைகளான சொத்துக்கள் மற்றும் பெறுமதி கணிப்பிடப்பட்டில்லாத 2 வகைகளான சொத்துக்கள் 1 வருடம் முதல் 5 வருட இடையிலான காலபகுதிளிலிருந்து பயனற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.5 ஒப்பந்தக் கட்டுப்பாடு

**அசுபினி எல்ல அபிவிருத்தி கவர்ச்சிக் கருத்திட்டம்**

அசுபினி எல்ல அபிவிருத்தி கவர்ச்சிக் கருத்திட்டம்ரூபா 12,500,000 ஆன தொகைக்கு மதிப்பிடப்பட்டு கங்க இஹல கோரலே பிரதேச சபை,மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாகாண சுற்றுலா திணைக்களம் போன்ற நிறுவனங்களின் இணைப்புடன் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறு, இக் கருத்திட்டத்திற்காக மத்திய மாகாண வனிக மற்றும் சுற்றுலா திணைக்களத்தினால் ரூபா 10,000,000 ஆன ஒதுக்கீடு 2016 பெப்ரவரி 24 திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2016 ஒக்டோபர் 31 திகதியில் மேல் குறிக்கப்பட்ட கருத்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என 2016 பெப்ரவரி 24 திகதியமத்திய மாகாண வியாபார வனிக மற்றும் அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரின் கடிதத்தால் உறுதிப்படுத்தப்பட்ட போதும்,2016 திசெம்பர் 31 திகதி வரை அக் கருத்திட்டத்திற்கு

பிரவேசிப்பதற்குரூபா 1,885,403 தொகையில் பாதையொன்று நிர்மானிக்க ஆரம்பிக்கப்பட்டதைத் தவிர,வேறு எவ்வித செயலும் நடைபெற்றிருக்கவில்லை.

**3.6 கருத்திட்டங்கள் தாமதித்தல்**

மகனெகும கிராம பாதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,500,000 ஆன ஒதுக்கீட்டின் மேல் 3 கருத்திட்டங்கள் மீதான நிர்மானபணிகள் 2013 ஆண்டில் 3 பொது நலன்புரி சங்கங்களுக்கு ஒப்படைக்கப்பபட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 திகதி வரையும் அக் கருத்திட்டங்களில் வேலை ஆரம்பிப்பதற்கு அல்லது அவ் உடன்படிக்கைகளைஇரத்துச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 கழிவுப் பொருள் முகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) குறுந்துவத்த பிரதேசத்தில் துருப்பிடிக்கும் கழிவுப் பொருட்கள் தினத்தோரும் 30-50 கி.கி இடையிலான அளவு உயிர் வாயு பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், தொலொஸ்பாகே, உலபனே பிரதேசங்களில் துருப்பிடிக்கும், துருப்பிடிக்காத கழிவுப் பொருட்கள் 175 கி.கி கிட்டிய அளவு வேறுபடுத்தப்படாமை உலபனே உடகமயில் அமைந்துள்ள கழிவுப் பொருள் குழியொன்றிற்கு முறையற்றதாக இடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு பாதீடு மதிப்பீட்டில் சுகாதார சேவையின் கீழ் கழிவுப் பொருள் முகாமை மீதான அறிவூட்டுவதற்கு ரூபா 50,000 ஆன ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 31 திகதி வரையும் கழிவுப் பொருள் முகாமைக்கான நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்திருக்கவில்லை.

(இ) குறுந்துவத்த நகரில் சேர்க்கப்படும் துருப்பிடிக்கும் கழிவுப் பொருட்கள் உயிர் வாயு பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன்,உற்பத்தி செய்யப்படும் உயிர் வாயு முன்னைய ஆண்டு முதல் அருகிளுள்ள கடையொன்றுக்கு இலவசமா பெற்றுக்கொடுத்திருந்தது.

**3.8 சுற்றாடல் பிரச்சினை**

சுபை அதிகார எல்லைக்குறித்தான குறுந்துவத்த பொது மலசல கூடம் மற்றும் எத்கால வியாபார கட்டிட தொகுதியில் பொது மலசல கூடத்தை எவ்வித பராமரிப்பு மற்றும் பழுதுபார்தழுமின்றி மக்கள் சுகாதாரத்திற்கு பாதகமான முறையில் நடாத்திச்செல்லப்பட்டிருந்தது.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

(அ) மீளாய்வாண்டின் சபை நிதியத்தினால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னைய ஆண்டின் அபிவிருத்தி உத்தேச திட்டங்கள் பெற்றுக்கொண்டு முன்னுரிமை தயாரித்து முன்னைய வருடத்தின் அமுல்படுத்துவதற்கு திட்டமிட்ட கருத்திட்டஙகளுக்காக முறையான தொழில்நுட்ப அலுவலகரிடமிருந்து மதிப்பீடு பெற்றுக்கொண்டு பாதீடு தயாரிக்காமை ,ரூபா 10,200,000 ஆன மொத்த பெறுமானத்தை பயன்படுத்தி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ள பாதீட்டின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் இடையில் 06 வருமான விடயங்களின் 23 சதவீதம் தொடக்கம் 41 சதவீதம் வரையிலும், 5 செலவினவிடயங்களின் 24 சதவீதம் தொடக்கம் 61 சதவீதம் வரையிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 26 செலவினவிடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 3,214,350 ஆன மொத்த ஒதுக்கீடும் சேமித்திருந்தன.

**4.2 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டினுள் ரூபா 12,849,153 ஆன மூலதன செலவினம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும்,பெறுகைகள்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கூட்டிணைந்த திட்டம்**

மீளாய்வாண்டிற்கானகூட்டிணைந்ததிட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்கானசெயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கடன் படுனர் மற்றும் கடன் கொடுனர்
(உ) பாதீடுக் கட்டுப்பாடு